செய்தி வெளியீடு எண் : 716 நாள்: 03.11. 07

## கோ—ஆப்டெக்ஸ் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு

இந்த அரசு பதவியேற்றவுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் அகவிலைப்படிக்கு நிகராக கோ—ஆப்டெக்ஸ் ஊழியர்களுக்கு அகவிலைப்படி வழங்க கடந்த ஆண்டு அரசு அறிவித்த 6 சதவீதத்துடன் நிலுவையிலிருந்த 17 சதவீதத்தினையும் சேர்த்து மொத்தம் 23 சதவீதம் அகவிலைப்படி வழங்க உத்தரவிட்டார்கள். இதனால் கடந்த ஆண்டு கோ—ஆப்டெக்ஸ் ஊழியர்கள் கூடுதலாக ரூ.181 இலட்சம் அளவிற்கு அகவிலைப்படி மூலமாக பயன் அடைந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, கோ—ஆப்டெக்ஸ் விற்பனைக் குறியீட்டினை அடைய, அனைத்து ஊழியர்களுக்கும் ஊக்கம் அளிக்கவும், மேலும் சிறப்பாக பணியாற்ற உற்சாகப்படுத்தவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிற்கிணங்க அரசு அறிவித்த 6 சதவீத அகவிலைப்படியுடன் நிலுவையிலிருந்த அகவிலைப்படியும் சேர்த்து மொத்தம் 17 சதவீத அகவிலைப்படி உயர்த்தி அதாவது 68 சதவீதத்திலிருந்து 85 சதவீதமாக 1.11.2007 முதல் வழங்க மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதன்மூலம் 1035 கோ—ஆப்டெக்ஸ் ஊழியர்கள் பயனடைவார்கள். கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ.136 இலட்சம் அளவிற்கு கூடுதல் செலவாகும் என்றும், ஊழியர்களுக்கு மாதம் ஒன்றிற்கு குறைந்தபட்சம் ரூ.430/— கூடுதல் ஊதியம் கிடைக்கும் எனவும் தெரிவித்தார்கள்.

***********

வெளியீடு : இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.